# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 21.03.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

*தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

கடந்த குத்பாவில் அல்லாஹ்வின் **ஹலீம்** (இரக்கமுடையவன்) என்ற அவனது பண்பைப் பற்றி கூறியிருந்தேன். சில மனிதர்கள், சில சமுதாயங்கள் அநீதியிழைப்பதிலும் இறைவனுக்குக் கீழ்படியாமல் இருப்பதிலும் எல்லை மீறி செயல்பட்ட பிறகும் கூட, அல்லாஹ் தனது இந்த பண்பின் மூலமாக அப்படிப்பட்ட மனிதர்களையும் சமுதாயங்களையும் கண்டும் காணாமல் விட்டுவிடுவதுடன் அவர்களை உடனடியாக பிடிக்கமாட்டான். அவன் இவ்வாறு கருணை காட்டி அவர்களுடன் மென்மையாக நடந்து கொள்ளமாமல் இருந்தால் அல்லது இவர்களை உடனடியாகப் பிடித்து தண்டனை வழங்கி இவர்களை பழிவாங்குகின்ற இறைவனின் பண்பு செயல்பட ஆரம்பித்தால், பிறகு உலகில் எந்தவொரு மனிதனும் எஞ்சியிருக்க முடியாது. மாறாக, உலகில் எந்தவொரு உயிரினமும் கூட எஞ்சியிருக்க முடியாது. அல்லாஹ் தன் மீது நம்பிக்கை கொள்கின்றவர்களுக்கும் தனது இந்த பண்பை மேற்கொண்டு நடக்கும்படி கட்டளையிட்டுள்ளான். இறைவனின் நிறத்தை மேற்கொள்வதே ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாக கூறப்பட்டிருக்கின்றது. நபிமார்களுக்கு அல்லாஹ் தனது இந்த பண்பிலிருந்தும் ஒரு பெரும் பங்கை வழங்கியுள்ளான். அதன் மூலமாக அவர்கள் உலகை சீர்திருத்துவதுடன் மக்கள் முன்னால் ஒரு அழகிய முன்மாதிரியாகவும் திகழ முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இந்தப் பண்பை எல்லாரையும் விட முழுமையாகப் புரிந்து கொண்டார்கள். இந்த வகையில் அவர்கள் அல்லாஹ்வின் இந்தப் பண்பை வெளிப்படுத்திக் காட்டினார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபணை செய்பவர்களை அவர்களது உள்ளத்திலுள்ள வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் குருடர்களாக்கி விட்டது. இந்த எதிரிகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் ஹலீம் (இரக்கமுடையவன்) என்ற பண்பு வெளிப்பட்டிருப்பதைக் காண (சகிக்க) முடியவில்லை. இந்தப் பண்பை மேற்கொள்வது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்திற்கு என்ன போதனைகளை வழங்கியுள்ளார்கள்? இது தொடர்பாக அவர்களது செயல் எவ்வாறு இருந்தது? இவற்றை விளக்குவதற்காக அல்லாஹ்வின் ஹலீம் என்ற இந்த பண்பை மேற்கோளாக வைத்து நான் சில நபிமொழிகளைக் கூற இருக்கின்றேன்.

ஒரு நபிமொழியைக் குறிப்பிட்டவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு முறை ஒரு நாட்டின் தூதுவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அந்த தூதுவர் அடிக்கடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தாடியின் பக்கம் தனது கையை நீட்டியவாறு பேசினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது வாள் மூலம் அந்த மனிதரது கையைத் தடுத்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்வாறு செய்வதையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து, இந்த மனிதர் எந்த அளவு அவமரியாதையாக உங்களுடன் நடந்து கொள்கின்றார் என்றால், இவரைக் கொல்ல வேண்டும் என்று எனது உள்ளம் விரும்புகிறது என்று கூறினார்கள். அவ்வாறிருந்தும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது இந்த எல்லா வகையான அவமரியாதையையும் சகித்துக் கொண்டார்கள். மேலும் அவர் மீது கடுமையைக் கையாள வேண்டாம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மேலான நல்லொழுக்கம் தொடர்பாகவும், அல்லாஹ்வின் ஹலீம் என்று பண்பை அவர்கள் மேற்கொண்டு நடந்தது தொடர்பாகவும் அவர்களது அழகிய முன்மாதிரி(யான) நபிமொழி அறிவிப்பு ஒன்றில் இவ்வாறு வருகின்றது.

*ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சலாம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் செய்து பின் ஸனா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். செய்து பின் ஸனா அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகத்தைக் கண்ட போது நபித்துவத்தின் எல்லா அறிகுறிகளும் அதில் எனக்கு தென்பட்டன. ஆனால், அவற்றில் இரு விஷயங்கள் மட்டும் எனக்கு தென்பட வில்லை. அவற்றில் **முதல் விஷயம்**, இந்த நபியின் மென்மையும், இரக்கக் குணமும் அவரது கோபத்தை விட மிகைத்து நிற்கக்கூடியதாக இருக்கும் என்பதாகும். **இரண்டாவது விஷயம்**, அந்த நபிக்கு எந்த அளவு கோபமூட்டினாலும், எந்த அளவு அவருடன் அவமரியாதையாக நடந்து கொள்ளப்பட்டாலும் அதை விட அதிகமாக மென்மையையும், சகிப்புத் தன்மையையும் மேற்கொள்பவராக இருப்பார் என்பதாகும். அவர்களிடம் இந்த இரண்டு அடையாளங்களும் உள்ளனவா என்பதை அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை நான் தேடிக் கொண்டிருந்தேன். ஏனென்றால், அப்போதுதான் எந்த நபியின் வருகை தொடர்பாக முன்னறிவிக்கப்பட்டிருந்ததோ அந்த நபி உண்மையில் இவர்தான் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும். அவர் தொடர்ந்து கூறுகின்றார்:

ஒரு நாள் ஒரு நாட்டுப்புறவாசியான காட்டரபி வந்தார். அவர் ஒரு கோத்திரத்தாரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் முஸ்லிம்களாகி விட்டதாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறினார். தொடர்ந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் முஸ்லிம்களாகி விட்டால் உங்களுக்கு பெருமளவில் *ரிஸ்க்* (உணவிற்கான வழிவகைகள்) கிடைக்கும் என்று நான் அவர்களிடம் கூறியிருந்தேன். இப்போது அவர்களின் நிலைமை என்னவென்றால், மழை பெய்யாமல் இருந்ததன் விளைவாக அவர்கள் பஞ்சத்திற்கு இரையாகி விட்டார்கள். எனவே, வேறு எவரிடமாவது உதவியைப் பெற்றுக் கொண்டு இஸ்லாத்திலிருந்தும் வெளியேறி சென்று விடக் கூடாது என்று நான் அஞ்சுகின்றேன். ஏனென்றால், ஏதோ ஒரு பேராசையின் காரணத்தால்தான் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர் என்று தெரிகிறது. எனவே, நீங்கள் நான் கூறுவது பொருத்தமானது என்று கருதினால் இவர்கள் மீது கருணை காட்டி இவர்களுக்கு சில உதவிகளைச் செய்து இவர்களது உள்ளங்கள் திருப்தியடையும் வகையில் நடந்து கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அவர் கூறினார். அந்த சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதுதொடர்பாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கேட்ட போது, இப்போது அவர்களுக்கு உதவி செய்ய அனுப்பி வைப்பதற்கு எந்த பொருளும் இல்லை என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். அந்த சமயத்தில் செய்து பின் ஸனா அங்கு இருந்தார்கள். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து, முஹம்மதே! இந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களிடம் எஞ்சியிருக்கும் பேரீத்தம்பழங்களை ஒரு குறிப்பிட்ட தவணைக்குள் எனக்கு நீங்கள் விற்பதாயிருந்தால், நான் இவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்று கூறினார். அதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், யூதனே! நாம் தீர்மானிக்கின்ற கால அளவிற்கு ஏற்பவும் பேரீத்தம்பழங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் இவற்றை நான் உனக்கு விற்பனை செய்ய முடியும். ஆனால், பேரீத்தம்பழங்கள் குறிப்பிட்ட ஒரு நபரின் தோட்டத்திலிருந்துதான் எனக்கு தரப்பட வேண்டும் என்று நீங்கள் கூறினால் அந்த நிபந்தனையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறினார்கள். அவரும் அந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டார். இவ்வாறு அவருக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டது. செய்து பின் ஸனா அவர்கள் தனது பையை திறந்து 80 மிஸ்கால் தங்கத்தை *(மிஸ்கால் என்பது தங்கத்தின் ஓர் அளவாகும் - மொழிபெயர்ப்பாளர்)* அந்த பேரீத்தம்பழங் களுக்குரிய முன் பணமாக வழங்கினார்கள். இந்த குறிப்பிட்ட நாட்களுக்குள் என்னிடம் வாங்கிய பணத்தை நீங்கள் திருப்பித் தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் செய்து பின் ஸனா அவர்கள் தங்கத்தை வழங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பணத்தை

அந்த காட்டரபியிடம் கொடுத்து அனுப்பி இதை அந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஸெய்து பின் ஸனா கூறுகின்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கோ அல்லது அவர்களுடன் தீர்மானிக்கப்பட்ட உடன்படிக்கைக்கு ஏற்ப பேரீத்தம்பழங்களை முழுமையாக எனக்கு கொடுப்பதற்கோ சில நாட்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. அந்த சமயத்தில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அவர்களைப் பார்த்ததும் அவர்களது கழுத்தை நான் பிடித்தேன். அவர்கள் போர்த்தியிருந்த போர்வையையும் இழுத்தேன். மேலும் மிகுந்த கோபத்துடன் கூறுவதைப் போல முஹம்மதே! நீங்கள் எனக்கு செலுத்த வேண்டிய உரிமையை செலுத்தாமல் விட்டு விடுவீர்களா? என்று கேட்டேன். தொடர்ந்து, அப்துல் முத்தலிபின் இந்த பழக்கத்தை நான் நன்றாக அறிவேன். அவரைச் சார்ந்தவர்கள் கடனைத் திருப்பிக் கொடுப்பதில் மிகவும் தீயவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறு சாக்குப்போக்குகள் கூறும் உங்களது பழக்கத்தைப் பற்றி எனக்கு தெரியும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினேன். அந்த சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களால் இந்த அவமரியாதையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்கள் மிகுந்த கோபத்துடன் என்னைப் பார்த்தார்கள். மேலும் அல்லாஹ்வின் பகைவனே! அல்லாஹ்வின் தூதரிடமா நீ இவ்வாறு பேசுகின்றாய். நானும் அதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். நான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நீ அவமரியாதையாக அவர்களுடன் நடந்து கொள்கின்றாயா? இந்த தூதரை உண்மையுடன் அனுப்பி வைத்த அந்த இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்! நான் இந்த தூதருக்கு அஞ்சுபவனாக இல்லையென்றால் எனது வாளால் உனது தலையை வெட்டியிருப்பேன் என்று என்னிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ மிகவும் அமைதியாக அமர்ந்தவாறே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் புன்சிரிப்புடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, உமரே! நீங்கள் கோபப்படுவதற்குப் பதிலாக என்னிடம் உரிமையுள்ளவர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை நீங்கள் செலுத்தியிருக்க வேண்டும் என்று கூறியிருக்க வேண்டும். அவ்வாறே அவரிடம் கடனை வசூல் செய்வதற்கும் சில வழிமுறைகள் உள்ளன. அதற்கேற்ப நீங்கள் செயல்பட வேண்டும் என்று கூறி அவருக்கு விஷயத்தை நன்றாக புரிய வைத்திருக்க வேண்டும் என்று கூறினார்கள். மேலும் இவரை அழைத்துச் சென்று இவருடன் செய்யப்பட்ட உடன்படிக்கையிலுள்ள அளவிற்கும் அதிகமாக 20 சாஹ் பேரீத்தம்பழத்தை *(சாஹ் என்று பேரீத்தம்பழ எடை அளவாகும் - மொழிபெயர்ப்பாளர்)* இவருக்கு கொடுத்து விடுங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். ஸெய்து பின் ஸனா கூறுகிறார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள். உடன்படிக்கையில் நான் குறிப்பிட்ட அளவு பேரீத்தம்பழங்களை எனக்கு வழங்கி அதை விட அதிகமாக 20 சாஹ் பேரீத்தம்பழங்களையும் எனக்கு அவர்கள் வழங்கினார்கள். அப்போது நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இந்த அதிகப்படியான பேரீத்தம்பழங்களை ஏன் எனக்கு தருகின்றீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நீங்கள் எந்த அளவு கடுமையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நடந்து கொண்டீர்களோ அதற்குப் பகரமாக இந்த அளவு பேரீத்தம்பழங்கள் உங்களுக்கு அதிகமாக வழங்குமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று கூறினார்கள். அதைக் கேட்ட ஸெய்த் பின் ஸனா அவர்கள் நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார். அதற்கு நீங்கள் யார் என்று எனக்கு தெரியாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள். அதற்கு 'நான் ஸெய்த் பின் ஸனா' என்று கூறினார். அந்த யூத ஆலிம் நீங்கள்தானா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டதற்கு ஹஸ்ரத் ஸெய்த் பின் ஸனா அவர்கள், ஆம்; நான்தான் அந்த யூத ஆலிம் என்று பதில் கூறினார்கள்.

*தொடர்ந்து ஹஸ்ரத் ஸெய்த் பின் ஸனா அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.*

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னைப் பார்த்து இவ்வளவு பெரிய ஆலிமாக இருந்து கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அவமரியாதையாக நடந்து கொண்டீர்களே என்று கூறினார். அதைக் கேட்ட நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்ததும் நபித்துவத்தின் அனைத்து அடையாளங்களும் அவர்களிடம் இருப்பதை நான் கண்டு கொண்டேன். ஆனால், அவற்றில் இரண்டு அடையாளங்கள் மட்டும் எனக்கு புலப்படாமல் இருந்தன. **முதலாவது அடையாளம்**, இந்த நபியின் மென்மைக் குணமும், சகிப்புத் தன்மையும் அவரது கோபத்தை விட மிகைத்து நிற்கின்றதா? என்பதைப் பார்க்க வேண்டும். **இரண்டாவதாக**, இந்த நபியுடன் எவ்வளவுதான் கடினமாகவும், அறிவீனமாகவும் ஒருவர் பரிமாறினாலும், அந்த அளவு அவர் அதற்கெதிரில் மென்மையாகவும், இரக்கத்துடனும் பரிமாறுகின்றாரா? என்பதையும் பார்க்க வேண்டும் என்று நான் நினைத்தேன். எனவே, எனக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததும் நான் இவ்விஷயங்களை சோதித்துப் பார்த்து விட்டேன். நான் அல்லாஹ்வை எனது இறைவனாகவும், இஸ்லாத்தை எனது மார்க்கமாவும், முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதர் என்றும் ஏற்றுக் கொண்டு அதற்கு உங்களை சாட்சியாக்குகின்றேன். மேலும் இந்த மகிழ்ச்சியில் எனது செல்வத்தில் பாதியை முஸ்லிம் உம்மத்திற்காக நான் வழங்கி விடுகின்றேன் என்று நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த மென்மைக் குணத்தையும், சகிப்புத் தன்மையையும் கண்டு இந்த யூத ஆலிம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பிறகு ஹஸ்ரத் ஸெய்த் பின் ஸனா (ரலி) அவர்கள் பல போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். தபூக் போரில் கலந்து கொண்டு திரும்பி வரும் வழியில் அவர்கள் வஃபாத் ஆனார்கள்.

இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான நல்லொழுக்கமாகும். இஸ்லாத்தின் எதிரியாக செயல்பட்ட ஒருவருடன், தான் செய்து கொண்ட உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதற்கு சில நாட்கள் கால அவகாசம் இருந்தும் கூட அந்த நபருடன் அன்பாகவும், மென்மையாகவும் நடந்து கொண்டு அவரது கடனை முழுமையாக திருப்பிக் கொடுத்ததுடன் மட்டுமல்லாமல் அவருக்கு கொடுக்க வேண்டியதை விட அதிகமாக கொடுக்கின்றார்கள். இவ்வாறு ஒரு சில சம்பவங்கள் மட்டுமல்ல. எண்ணற்ற சம்பவங்களை அறிவிப்புகளில் நம்மால் பார்க்க முடியும். மேலும் நம்மை வந்தடையாத இதைப் போன்ற இலட்சக்கணக்கான சம்பவங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையில் நடந்திருக்கின்றது.

*ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கினறார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு நபரிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியதிருந்தது. கடன் கொடுத்த அந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார். இதைப் பார்த்த நபித்தோழர்கள் அந்த நபரை அடிப்பதற்காக எழுந்தார்கள். அதைப் பார்த்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடன் கொடுத்தவருக்கு பேசுவதற்குரிய உரிமை இருக்கின்றது என்று நபித்தோழர்களிடம் கூறினார்கள். அந்த நபருக்கு ஒட்டகம் அல்லது ஆடு போன்ற ஏதாவதொரு விலங்கு கடனாகத் திருப்பிக் கொடுக்க வேண்டியதிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் தந்த அதே வயதையொத்த ஒரு விலங்கை அவருக்கு திருப்பிக் கொடுக்கும்படி நபித்தோழர்களுக்கு கட்டளையிட்டார்கள். அதற்கு நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர் தந்த விலங்கை விட வயதில் பெரியதாக இருக்கும் விலங்குதான் இப்போது நம்மிடம் இருக்கின்றது என்று கூறினார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த விலங்கையே விலைக்கு வாங்கி இவரிடம் ஒப்படைத்து விடுங்கள். உங்களில் எவர் தனது கடனை சிறந்த முறையில் திருப்பிக்

கொடுக்கின்றாரோ அவர்தான் உங்களில் சிறந்தவராவார். அதில் எவ்வித கடினமும் காட்டக் கூடாது என்று கூறினார்கள்.

அரபியில் ஹில்ம் என்ற சொல்லிற்கு சகித்துக் கொள்வது, கருணை காட்டுவது என்ற பொருள்களும் இருக்கின்றன. நான் தற்போது கூறிய இந்த இரண்டு சம்பவங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சகிப்புத் தன்மையும், பிறருடன் பரிவுடனும், கருணையுடனும் நடந்து கொள்ளும் தன்மையும் நமக்கு தெளிவாகத் தெரிகிறது.

பிறகு குடும்ப வாழ்விலிருந்தும் ஓர் உதாரணத்தை எடுத்துக் கூறுகின்றேன். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள் என்பது நமக்கு தெரிய வரும். பிறர் செய்த தவறான செயலையும் அவர் அதை உணரும் வண்ணம் எடுத்துக் கூறுவார்கள். அதில் எவ்வித கடினத்தையும் அவர்கள் கைக்கொள்ளவில்லை.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. பனி ஸாஹ் என்ற கோத்திரத்தைச் சார்ந்த ஒரு நபர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களிடம், எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தைப் பற்றிக் கூறுங்கள் என்று கூறினார். அதைக் கேட்ட ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், நீங்கள் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி ***இன்னக லஅலா குல்கின் அழீம்*** - நிச்சயமாக நீர் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலைபெற்று விட்டீர் என்று வந்திருப்பதை படிக்கவில்லையா? என்று கேட்டார்கள்.

*பிறகு தொடர்ந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அப்போது நானும் அவர்களுக்காக உணவு தயார் செய்தேன். ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களும் அவர்களுக்காக உணவு தயார் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் எனக்கு முன்பாக தான் தயார் செய்த உணவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். அப்போது நான் எனது பெண் ஊழியரிடம் நீ உடனடியாக உணவு வைக்கப்பட்டுள்ள அந்த பாத்திரம் கீழே விழும் வகையில் தட்டி விடுங்கள் என்று கூறினேன். அந்த பெண் ஊழியரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்பு அந்த உணவு வைக்கப்பட்டிருந்த பார்த்திரத்தை வைக்கும்போது அந்த பாத்திரத்தை தட்டி விட்டார். அந்த பாத்திரம் கீழே விழுந்து உடைந்தது. உணவும் கீழே சிதறியது.

*ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடைந்துபோன பாத்திரத் துண்டுகளை ஒன்றுசேர்த்தார்கள். சிதறிய உணவுகளையும் ஒன்றுசேர்த்தார்கள். பிறகு அவற்றை தோலால் செய்யப்பட்ட ஒரு உணவுத் தட்டில் வைத்தார்கள். பிறகு அதில் எஞ்சியிருந்த அந்த உணவை அவர்கள் சாப்பிட்டார்கள். பிறகு நான் கொடுத்த உணவுப் பாத்திரத்தை ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு திருப்பிக் கொடுத்தவாறு இந்த பாத்திரத்தையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். இதிலுள்ள உணவையும் நீங்கள் சாப்பிடுங்கள் என்று கூறினார்கள்.

*ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முகத்தில் இந்த சமயத்தில் கோபத்தின் எந்த அறிகுறியும் இருக்கவில்லை. தனது இந்த செயல் மூலமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கும், அந்தப் பெண் ஊழியருக்கும் போதனை செய்து சக்களத்திகள் இருவருக்கும் இடையிலுள்ள உரிமைகள் அல்லாஹ் அனுமதித்துள்ள வரம்புகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். எவ்விதத்திலும் ஒருவர் மற்றவர் மீது பகைமை கொள்ளக் கூடாது என்பதை புரிய வைத்து விட்டார்கள்.

அவர்கள் நிலைநாட்டிய இந்த மகத்தான முன்மாதிரியானது அந்த காலத்திலுள்ள மக்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக, உலகம் உள்ள நாள் வரை இந்த முன்மாதிரியைப் பின்பற்றியவாறு

நாமும் செயல்பட வேண்டும் என்பதற்காகவே அது நிலைநாட்டப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சம்பவங்களைப் படித்து விட்டு அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் நமது வாழ்வில் வரும் போது அந்த முன்மாதிரிகளை நாம் மறந்து விட்டால் அதனால் என்ன பலன் ஏற்படும்? சிறிய சிறிய தவறுகளுக்காக எஜமானர் தனக்குக் கீழ் வேலை பார்ப்பவர்களிடம் மிகவும் கீழ்த்தரமாக பரிமாறுகின்றனர் என்றும், சில கணவன்மார்கள் தங்களது மனைவிகளுக்கு கொடுமை இழைப்பது பற்றியும் பல முறையீடுகள் எனக்கு வருகின்றன. சிலர் எந்த அளவு தனது ஆதிக்கத்தின்கீழ் உள்ளவர்களை தவறான முறையில் அடித்து விடுகின்றார்கள் என்றால் இறுதியில் அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை உருவாகி விடுகிறது. ஐரோப்பாவில் சில சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்டவர்களை போலீஸ் கைது செய்கிறது. பிறகு வழக்குகளின் ஒரு புதிய தொடர் ஆரம்பமாகி விடுகிறது. எனவே, தமது வீட்டில் உள்ளவர்களிடம் அன்பாகவும், மென்மையாகவும், பரிவுடனும் நடந்து கொள்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த நடைமுறையை நாம் பின்பற்றி நடக்க வேண்டும். சில நேரங்களில் கணவன் மட்டுமின்றி அவரது உறவினர்களும் கணவனுடன் சேர்ந்து இந்த சண்டையில் பங்கு பெறுகின்றார்கள். மாமியாரும் மருமகளை அடிக்க ஆரம்பித்து விடுகின்றார். எனவே, இப்படிப்பட்ட விஷயங்களிலிருந்து விலகி நின்றவாறு எப்போதும் கோபத்தை கட்டுப்படுத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒருவருக்கு கோபம் வரும் போது அவர் நின்று கொண்டிருந்தால் அவர் அமர்ந்து விட வேண்டும். அப்போது அவர் உட்கார்ந்திருந்தால் படுத்து விட வேண்டும். இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். ***லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யுல் அளீம்*** என்று கூற வேண்டும். குளிர்ந்த தண்ணீரால் உடலைக் கழுக வேண்டும். உளூ செய்ய வேண்டும். இப்படிப்பட்ட பல வழிமுறைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்திருப்பது இவற்றை நாம் கோபம் வரும் சந்தர்ப்பத்தில் செயல்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் என்பதை நாம் புரிந்து செயல்பட வேண்டும்.

பிறகு முஸ்லிம் அல்லாதவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழைத்த கொடுமைகளை எவ்வாறு அவர்கள் சகித்துக் கொண்டார்கள்? மேலும் எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நல்ல முறையில் பரிமாறினார்கள் என்பதைப் பற்றி பல சம்பவங்கள் உள்ளள.

மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறை இல்லமான கஃபாவின் வாசல் அருகில் நின்றவாறு குரைஷியர்களே! நான் உங்களிடம் எவ்வாறு பரிமாற வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு குரைஷியர்கள் நீங்கள் எங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று பதில் கூறினார்கள். மேலும் நீங்கள் எங்களது கண்ணியத்திற்குரிய சகோதரர் ஆவீர்கள். எங்களது கண்ணியத்திற்குரிய சகோதரரின் மகனாவீர்கள் என்றும் கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ***இஸ்ஹபூ ஃப அன்துமுத்துலக்கா*** - செல்லுங்கள். உங்களுக்கு விடுதலை வழங்கப்படுகிறது என்று கூறினார்கள்.

பிறகு மக்கா வெற்றியின்போது நடைபெற்ற இன்னொரு சம்பவத்தை கூறுகின்றேன். இஸ்லாத்தின் எதிரியான ஸஃப்பான் பின் உமைய்யா என்பவர் மக்காவிலிருந்து ஜித்தாவிற்கு தப்பி ஓடி விட்டார். அதன் மூலம் அங்கிருந்து யமன் நாட்டிற்கு செல்ல அவர் எண்ணியிருந்தார். அப்போது ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஸஃப்பான் பின் உமைய்யா தனது சமுதாயத்தின் தலைவராக இருக்கின்றார். ஆனால், உங்கள் மீதுள்ள அச்சத்தால் அவர் இங்கிருந்து ஓடி விட்டார். அவர் கடலில் பயணம் செய்யப் போகின்றார். நீங்கள் அவருக்கு அமைதிக்கான அடைக்கலத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃப்பான்

பின் உமைய்யாவிற்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் அவருக்கு பாதுகாப்பு வழங்குவீர்கள் என்பதை அவர் புரிந்து கொள்ளும் வகையில் ஏதாவதொரு அடையாளத்தை எனக்கு நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவில் வெற்றி வீரராக அவர்கள் நுழைந்த சமயத்தில் அவர்கள் அணிந்திருந்த தலைப்பாகையை அவருக்கு வழங்கினார்கள். ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் அந்த தலைப்பாகையை எடுத்துக் கொண்டு ஸஃப்பான் பின் உமைய்யாவை சந்திக்கச் சென்றார். அப்போது அவர் கடலில் பயணம் செய்ய தயாராகிக் கொண்டிருந்தார். கப்பலில் ஏறுவதற்கு முன்னதாக அவரை சந்தித்த ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் அவரிடம், இறைவனுக்கு அஞ்சுங்கள். உங்களை நீங்களே அழிவிற்கு ஆளாக்கிக் கொள்ளாதீர்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து உங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்ற நற்செய்தியை கொண்டு வந்திருக்கின்றேன் என்று கூறினார்கள். அதற்கு அவர் இங்கிருந்து விலகிச் சென்று விடுவாயாக. என்னை நீர் அழிவிற்கு ஆளாக்காதீர் என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா மக்களை விடவும் சிறந்தவர் என்பதும், எல்லாரையும் விட நல்ல முறையில் நடந்து கொள்பவர் என்பதும் மக்களில் எல்லாரைக் காட்டிலும் அதிகமாக இரக்க குணமுடையவர்கள் என்பதும் உமக்கு தெரியாதா? அவர் உனது சிறிய தகப்பனாரின் உறவினராவார். அவரது கண்ணியம் உமது கண்ணியமாக இருக்கின்றது. அவரது சிறப்பு உமது சிறப்பாக இருக்கின்றது. அவரது அரசாட்சி உமது அரசாட்சியாகும் என்று கூறினார்கள். இதைக் கேட்ட அவர் எனது உள்ளத்தில் முஹம்மதைப் பற்றிய அச்சம் இருக்கின்றது என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் நீர் எண்ணிப்பார்க்க முடியாத அளவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மென்மையுள்ளம் கொண்டவர்களும் கருணையும் பரிவும் உடையவர்கள் என்று கூறினார். பிறகு ஹஸ்ரத் உமைர் பின் வஹப் (ரலி) அவர்கள் திரும்ப ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அவருடன் ஸஃப்பான் பின் உமைய்யாவும் வந்திருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நீங்கள் எனக்கு பாதுகாப்பு வழங்கியிருப்பதாக உமைர் கூறுவது உண்மையா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'ஆம்' என்று பதில் அளித்தார்கள். இதைக் கேட்ட ஸஃப்பான் அவர்கள், நீங்கள் எனக்கு இரண்டு மாதம் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கூறினார். அதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உமக்கு 4 மாத காலம் அவகாசம் வழங்கப்படுகிறது. நீர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நான் உனக்கு பாதுகாப்பு வழங்கியிருப்பதாக ஒருபோதும் நீர் நினைக்க வேண்டாம் என்று கூறினார்கள்.

சகிப்புத்தன்மை, பரிவு காட்டும் குணம் தொடர்பாக மேலும் சில நபிமொழிகளை நான் உங்களுக்கு கூறுகின்றேன்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**
**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

பிறரை சண்டையில் வீழ்த்துபவர் ஆற்றல்மிக்க பயில்வான் அல்ல. மாறாக, கோபத்தின் போது தன்னை கட்டுப்படுத்திக் கொள்பவரே ஆற்றல்மிக்க பயில்வானாவார்.

*ஹஸ்ரத் சுலைமான் பின் சுரத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தேன். எங்களுக்கு அருகில் இரண்டு நபர்கள் சண்டையிட்டுக் கொண்டு இருந்தார்கள். இவர்களில் ஒருவரது முகம் கோபத்தால் சிவந்திருந்தது. அவரது நரம்புகளும் தடித்துக் காணப்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் ஒரு விஷயத்தை கூறுவேன். அதனை இந்த நபர் கூறினால் அவரது கோபத்தின் இந்த நிலை மாறி விடும் என்று கூறினார்கள். மேலும் அது *அவூதுபில்லாஹி*

***மினஷ்ஷய்த்தா னிர்ரஜீம்*** - விரட்டப்பட்ட ஷய்த்தானின் தீங்கை விட்டும் நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றேன் என்று கூறுவது தான் என்று அவர்கள் கூறினார்கள். சண்டைபோட்டுக் கொண்டிருந்த அந்த நபரிடம் மக்கள் நீர் ***அவூதுபில்லாஹி மினஷ்ஷய்த்தா னிர்ரஜீம்*** என்று கூறுவீராக; நீர் அல்லாஹ்வின் அடைக்கலத்தின்கீழ் வந்து விட்டால் உமது கோபம் தனிந்து விடும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எனக்கு ஒரு போதனையை கூறுங்கள் என்று கூறினார். அதற்கு நீங்கள் கோபத்தை தவிர்க்க வேண்டும் என்று கூறினார்கள். அவர் மீண்டும் மீண்டும் பலமுறை எனக்கு போதனை செய்யுங்கள் என்று கூறியபோதெல்லாம் ஒவ்வொரு முறையும் நீங்கள் கோபத்தை தவிர்க்க வேண்டும் என்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

சிலர் சில விஷயங்களை கேட்டதும் கோபப்படுவதுடன் கோபம் அவர்கள் மீது ஆதிக்கத்தை செலுத்த ஆரம்பித்து விட்டால் அதனால் பிறருக்கும் இழப்பை ஏற்படுத்தி தங்களையும் அவர்கள் துன்பத்தில் ஆழ்த்திக் கொள்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த போதனையை நினைவிற் கொள்ள வேண்டும். கோபம் வருவது மனித இயல்பில் உள்ள ஒன்றாகும். ஆனால், அதை நாம் நமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் கோபம் வந்திருக்கின்றது. ஆனால் அந்த கோபம் அல்லாஹ்வின் புனிதத் தன்மையை வெளிப்படுத்துவதற்கும் அவனது மார்க்கத்திற்காகவும்தான் வந்தது. ஒருபோதும் தனது சொந்த விவகாரங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபப்பட்டதேயில்லை.

*ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் எனது உறவினர்களின் உறவை நல்ல முறையில் பேணுகின்றேன். ஆனால், அவர்களோ என்னுடனுள்ள உறவை முறித்துக் கொண்டார்கள். நான் அவர்களிடம் நல்ல முறையில் பரிமாறுகின்றேன். அவர்களோ தீய முறையில் என்னிடம் பரிமாறுகின்றார்கள். நான் அவர்களுடன் மென்மையுடனும் இரக்கத்துடனும் நடந்து கொள்கின்றேன். அவர்கள் என்னுடன் அறிவீனமாக நடந்து கொள்கின்றார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீர் என்னிடம் கூறியதைப் போன்றே செயல்படுகின்றீர் என்றால் நீர் அவர்கள் மீது மண்ணைப் போடுகின்றீர். நீர் இந்த நிலைமையில் நிலைத்திருக்கும் வரையில் அல்லாஹ்வின் தரப்பிலிருந்தும் அவர்களுக்கு எதிராக உமக்கு உதவி செய்பவர் ஒருவர் இருப்பார் என்று கூறினார்கள். எனவே, மனிதன் தானே பழிவாங்க ஆரம்பித்து, ஷய்த்தானின் மடியில் செல்வதற்குப் பதிலாக அல்லாஹ்வின் தரப்பிலிருந்தும் உள்ள உதவியாளரைப் பெற வேண்டும்.

*ஹஸ்ரத் ஸஹல் தனது பாட்டனாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:*

ஒருவருக்கு தனது கோபத்தை பிறருக்கு வெளிப்படுத்திக் காட்டக்கூடிய ஆற்றல் இருந்தும் அவர் அதை கட்டுப்படுத்திக் கொண்டால் அப்படிப்பட்டவரை அல்லாஹ் மறுமை நாளன்று படைப்பினங்களுக்கு முன்னால் அழைப்பான். இவர் எனக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதை காட்டுவதற்காகத்தான் அல்லாஹ் அவ்வாறு செய்வான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை என்னிடம் உமக்கு மன்னிப்பு கிடைப்பதற்கான சில சொற்களை கற்றுத் தரட்டுமா? என்று கேட்டார்கள். மேலும் உமது நற்பாக்கியத்தில் உண்மையிலேயே நீர் மன்னிக்கப்பட வேண்டும் என்றிருந்தால் இந்த சொற்களை கூறுவதன் மூலம் உமக்கு மன்னிப்பு வழங்கப்படும். அந்த சொற்கள் இவையாகும்.

***லா இலாஹ இல்லல்லாஹுல் ஹலீமுல் கரீம். லா இலாஹ இல்லல்லாஹுல் அலிய்யுல் அழீம். சுபுஹானல்லாஹி ரப்பிஸ்ஸமாவாத்திஸ்ஸப்ஹி வ ரப்பில் அர்ஸில் அழீம். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.*** அதாவது அல்லாஹ்வைத்தவிர வேறு எவரும் வணக்கத்திற்குரியவன் அல்லன். அவன் இரக்கமுள்ளவனும், கருணை காட்டுபவனுமாவான். அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை. அவன் உயர்வான மகிமையையுடையவன்; அவன் மகத்தானவன். விண்ணிற்கும் மண்ணிற்கும் இறைவனாக இருக்கும் அவன் தூயவன். அவன் மகத்தான அரியணையின் இறைவனாவான். எல்லா உலகங்களின் இறைவனாக இருக்கும் அல்லாஹ்விற்கே எல்லா வகையான புகழும் உள்ளன.

இந்த துஆக்கள் மனிதனின் பாவமன்னிப்பிற்கு காரணமாக இருக்கும். பிறகு இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஜஹ் அப்துல் கைஸ் அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள்:

உம்மிடமுள்ள இரண்டு நற்பண்புகளை இறைவன் விரும்புகின்றான். அவற்றில் ஒன்று, நீர் இரக்க குணமுடையவராக இருப்பதாகும். மற்றொன்று, முழுமையான கட்டுக்கோப்புடன் ஒவ்வொரு செயலையும் சீராக நீங்கள் செய்வதாகும்.

அகராதிப் பொருள்களை நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஹில்ம் என்ற சொல்லிற்கு கருணை காட்டுவது, மன்னித்தல், கோபத்தை கட்டுப்படுத்துவது ஆகிய பொருள்கள் உள்ளன. இவை எப்படிப்பட்ட நற்பண்புகளாக இருக்கின்றன வென்றால் சமுதாயத்தின் அமைதிக்கும் இவை மிக மிக அவசியமானதாகும். ஆன்மீக முன்னேற்றத்திற்கும் இவை மிகவும் அவசியமானதாகும். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும் இவை முக்கியமானவையாக உள்ளன. இந்த காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகத் திகழும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக எத்தகைய உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டினாயுள்ளார்கள்? என்பதை விளக்கும் வகையில் ஒரு சில சம்பவங்களை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

அல்லாஹ்வின் ஹலீம் - இரக்கமுடையவன் என்ற இந்த பண்பை நாம் மேற்கொண்டு நடப்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல போதனைகளை நமக்கு செய்துள்ளார்கள். பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

வெட்கக்கேடான செயல்களை செய்வதை தவிர பெண்களது மற்ற எல்லா கடினமான, கோணலான ஒழுக்க சீர்குலைவுகளையும் நாம் சகித்துக் கொள்ள வேண்டும். ஆணாக இருந்து கொண்டு பெண்ணுடன் போர் செய்வது முழுமையான வெட்கமில்லாத ஓர் நிலையாகும். அல்லாஹ் நம்மை ஆணாக படைத்துள்ளான். உண்மையில் இது அவன் தனது அருட்கொடையை நம்மீது நிறைவு செய்வதாகும். நாம் பெண்களுடன் பரிவுடனும், மென்மையுடனும் நடந்து கொள்வது அவனது இந்த அருட்கொடைக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

ஒரு முறை கடின இயல்பு உள்ளவராகவும், தீய சொற்களைப் பேசுபவராகவும் இருக்கும் ஒருவரை பற்றி, அவர் தனது மனைவியிடம் கடுமையாக நடந்து கொள்கின்றார் என்று ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் முறையீடு செய்யப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இந்த விஷயத்தால் மிகுந்த துக்கம் ஏற்பட்டது.

அது தொடர்பாக அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நமது சகோதரர்கள் இவ்வாறு நடந்து கொள்ளக்கூடாது.

இவ்வாறு கூறிவிட்டு பெண்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் மிக நீண்ட நேரம் போதனை செய்தார்கள்.

*ஹஸ்ரத் யாகூப் அலி சாஹிப் இர்பானி (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.*

ஹஸ்ரத் ஹாமித் அலி சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஊழியராக மிக நீண்ட காலமாக இருந்து வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு அவர்களது வயதின் இறுதிக் காலத்தில் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா அவருக்கு ஓய்வூதியம் வழங்கியது. அவர் காதியானில் தங்குவதற்காகவே அவர் ஒரு சிறிய கடையை நடத்தி வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உயர்வான நல்லொழுக்கமும், ஹாபிஸ் சாஹிபுடன் அவர்கள் நல்ல முறையில் பரிமாறிய விதமும் அவரது உள்ளத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர் பலமுறை அது தொடர்பாக கூறும்போதெல்லாம் நான் அப்படிப்பட்ட மனிதரை ஒருபோதும் பார்க்கவில்லை. மாறாக, எனது வாழ்நாள் முழுவதும் இவ்வளவு மகிமைமிக்க, நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ள ஒரு மனிதரை என்னால் பார்க்க முடியவில்லை என்று கூறினார்கள்.

*மேலும் ஹாபிஸ் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

எனது முழு வாழ்நாளிலும் ஒரு போதும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் என்னை அதட்டியதில்லை. என்னிடம் கடுமையாகப் பேசியதுமில்லை. மாறாக நான் மிகவும் சோம்பேறியாக இருந்தேன். பெரும்பாலும் அவர்கள் எனக்கு இட்ட கட்டளைகளை மிகவும் காலம் தாழ்த்தியே செய்து வந்தேன். ஆனால், ஒருபோதும் அவர்கள் அதற்காக என்னை கடிந்து கொண்டதில்லை.

பிறகு மனிதனுக்கு நோய் வருகின்ற ஒரு காலக்கட்டத்தையும் அவன் பார்க்க வேண்டியுள்ளது. நோய் வரும்போது எப்போதும் கிடுகிடுவென்று கோபப்படும் நிலையும் சிலரிடம் ஏற்பட்டு விடுகின்றது. ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நோயுற்ற சமயத்தில் அவர்களது நிலை எவ்வாறிருந்தது? இது தொடர்பாக சில அறிவிப்புகளை இப்போது கேளுங்கள்.

*ஹஸ்ரத் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடுமையான தலைவலி ஏற்பட்டது. அப்போது நான் அவர்களுக்கு அருகில் இருந்தேன். வெளியில் சிலர் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் இந்த கூச்சலால் உங்களுக்கு தொல்லை ஏற்படுகிறது அல்லவா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம்! இவர்கள் அமைதியாக இருந்தால் எனக்கு சுகமாக இருக்கும் என்று கூறினார்கள். அப்போது நான் அவர்களிடம் இவர்கள் அமைதியாக இருக்குமாறு நீங்கள் கட்டளையிட்டால் என்ன? என்ற கேட்டேன். அதற்கு அவர்கள் நீங்கள் மென்மையாக இவர்களுக்கு எடுத்து கூறுங்கள். நான் இதை கூற முடியாது என்று கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடுமையாக நோயுள்ள காலக்கட்டத்தில் அவர்கள் தனிமையான அறையில் இருக்கும்போது எப்போதும் அவர்கள் நன்றாக தூங்குவதுபோல்தான் காணப்பட்டார்கள். இவர் என்னை கவனிக்கவில்லை என்றோ, இவர் எனக்கு தண்ணீர் தரவில்லை என்றோ, இவர் என்னைப் பார்க்க வரவில்லை என்றோ யாரைப் பற்றியும் எப்போதும் அவர்கள் எந்த முறையீட்டையும் செய்ததில்லை.

*தொடர்ந்து மௌலவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:*

சிலர் நோயால் பாதிப்புக்கு ஆளாகும்போது அவரது இயல்பில் எடுத்ததற்கெல்லாம் கோபப்படுகின்ற நிலை வந்துவிடும். சில நேரம் அந்த நிலையிலேயே மற்றவர்களை அவர்கள் கோபத்துடன் முறைத்துப் பார்ப்பார்கள். சில நேரங்களில் ஏசவும் செய்வார்கள். இதனால் அந்த நோயாளியின் மனைவிக்கும் உறவினர்களுக்கும் பெரும் துன்பம் ஏற்படுகின்றது. அந்த நோயாளியின் மனைவிக்கு பகலிலும் நிம்மதியாக இருக்க முடியாது, இரவிலும் நிம்மதியாக இருக்க முடியாது. ஆனால், இந்த நோயாளியின் நோய் அதிகமாகிவிடக் கூடாது என்பதற்காக அவர் சொல்வதையும், செய்வதையும் அந்த மனைவி தாங்கிக் கொள்வார். சுருக்கமாக, இப்படிப்பட்ட துன்பமான நிலைமை குறித்து யார்தான் அறியாமல் இருப்பார்? ஆனால், முற்றிலும் இந்த நிலைமைகளுக்கு மாற்றமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் நிலைமை இருந்ததை

பல வருடங்களாக நான் பார்த்து வருகின்றேன். அவர்கள் ஆரோக்கியமாக இருந்த நாட்களில் அமைதியாகவும், நிம்மதியாகவும், பிறருக்கு எவ்வகையிலும் எந்த தொல்லையும் கொடுக்காமல் இருந்ததைப் போலவே நோயுற்ற காலக்கட்டத்திலும் அவர்களது நிலைமை இருந்தது. சிறிது உடல் நலம் தேறிவிட்டாலும் அதே புன்சிரிப்பையும், அன்பாக பேசுதல், மகிழ்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் பிறரை அவர்கள் சந்திக்கும் நிலைமையையும் என்னால் பார்க்க முடிந்தது. சில சமயங்களில் நீண்ட காலமாக அவர்களுக்கிருந்த தலைவலியிலிருந்து அவர்கள் விடுபட்டு அப்போதுதான் அவர்களது உடல்நலம் சற்று நன்றாக இருக்கும்போது நான் அவர்களை சந்திக்கச் சென்றுள்ளேன். அப்போதுகூட கண்களை மெல்ல திற்நதவாறு என்னை அவர்கள் பார்க்கும்போதும் கூட புன்னகையுடன் என்னை பார்த்தார்கள். மேலும் இப்போது அல்லாஹ்வின் அருளால் நான் நலமாக இருக்கின்றேன் என்று கூறினார்கள். அவர்களுக்கு உடல்நலம் சற்று தேறியிருக்கும் சமயத்தில் அவர்களை நான் சந்திக்கின்ற போது அன்னார் மிக அழகான, உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஒரு தோட்டத்தில் உலாவச் சென்று விட்டு திரும்பி வந்தவரைப் போல உற்சாகத்துடன் காணப்படுவார்கள். அவர்கள் முகத்தில் உள்ள ஒளியிலிருந்து அது எனக்கு தெரிய வந்தது.

இன்னொரு அறிவிப்பில் எதிரிகளின் தீய பரிமாற்றத்திற்கு எதிரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சகிப்புத்தன்மை எப்படி இருந்தது என்பதை பற்றி *ஹஸ்ரத் யாகூப் அலி சாஹிப் இர்பானி (அலை) அவர்கள்* இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:

ஒரு முறை ஒரு பிரம்ம சமாஜ் தலைவர் ஒருவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் சில கேள்விகளை கேட்டு கொண்டிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அதற்கு பதில் கூறிக்கொண்டிருந்தார்கள். இந்த சமயத்தில் தீய சொற்களை பேசுகின்ற ஒரு எதிரி அங்கு வந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னால் நின்றவாறு உள்ளம் புண்படக்கூடிய அளவில் மிகவும் இழிவான தாக்குதலை அவர்கள் மீது தொடுக்க ஆரம்பித்தார். அந்த காட்சி இப்போதும் என் கண் முன்னால் இருக்கின்றது. அவர்கள் எப்போதும் அமர்வது போல அவர்களது தலைப்பாகையின் விளிம்பை பிடித்து தனது கன்னத்தில் வைத்தவாறு மிகவும் அமைதியுடன் அவர் கூறுவதை கேட்டு கொண்டிருந்தார்கள். அந்த எதிரியோ கூச்சலிட்டு உளறிக்கொண்டேயிருந்தார். அசுத்தமான பேச்சுக்களை பேசினார். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களோ எதுவுமே நடக்காதது போல அவர் கூறுவதை ரசித்து கேட்டு கொண்டிருப்பதை போல் அமைதியாக இருந்தார்கள் அல்லது இனிமையாக பேசுகின்ற ஒருவரது பேச்சை கேட்பது போல் அவர்கள் அமைதியுடன் அவர் கூறுவதை கேட்டு கொண்டிருந்தார்கள். வந்திருந்த பிரம்ம சமாஜ் தலைவர் அந்த நபரை அவ்வாறு செய்வதிலிருந்தும் தடை செய்ய விரும்பினார். ஆனால், அந்த எதிரி அதையும் பொருட்படுத்தவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் அந்த பிரம்ம சமாஜ் தலைவரை பார்த்து நீங்கள் அவரை ஒன்றும் கூறாதீர்கள். அவர் சொல்வதை சொல்லட்டும் என்று கூறினார்கள். இறுதியில் அந்த எதிரி சிறிது நேரம் உளறிவிட்டு தாமாகவே சோர்வடைந்தார். பிறகு அங்கிருந்து எழுந்து சென்று விட்டார்.

இந்த காட்சிகளை கண்ட பிரம்ம சமாஜ் தலைவர் அவர்களுக்கு அதனால் சிறந்த நல்ல தாக்கம் ஏற்பட்டது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களை பார்த்து இது உங்களது நல்லொழுக்கத்தின் மிகப்பெரும் அற்புதமாகும் என்று கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் அந்த நபரை அமைதியாக இருக்குமாறு கூறியிருக்க முடியும். அவர்களது வீட்டிலிருந்து அவரை வெளியேற்றியிருக்கவும் முடியும். அந்த மனிதன் வீண் பேச்சுக்களை பேசிய சமயத்தில் அவர்கள் சைகையாக கட்டளையிட்டிருந்தால் கூட அந்த நபரது நாவு துண்டிக்கப்பட்டிருக்கும். ஆனால், அவர்கள் தங்களது முழுமையான சகிப்புத் தன்மையையும் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் தன்மையையும் செயலளவில் நிரூபித்துக் காட்டினார்கள்.

*பிறகு ஹஸ்ரத் யாகூப் அலி சாஹிப் இர்பானி (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:*

ஜலந்தர் நகரில் ஒரு முறை மீர் அப்பாஸ் அலி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முன்னால் அமர்ந்தவாறு சில ஆட்சேபனைகளை செய்து

கொண்டிருந்தார்கள். மவ்லானா அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்களும் அந்த சபையில் இருந்தார்கள். மவ்லானா ஸாஹிப் அவர்களே இந்த சம்பவத்தை என்னிடம் இவ்வாறு கூறினார்கள்:

நான் பார்த்து கொண்டேயிருந்தேன். மீர் அப்பாஸ் அலி ஒரு ஆட்சேபனையை செய்தார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மிகவும் அன்பாகவும், பரிவுடனும், மென்மையாகவும் பதில் கூறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களது பேசும் முறையில் மென்மையையும், அன்பையும், கனிவையும் அவர்கள் வெளிப்படுத்தி கொண்டிருப்பதை கண்ட மீர் ஸாஹிப் மேலும் மேலும் ஆட்சேபனைகளை செய்து கொண்டே இருந்தார். இறுதியில் இவ்வாறு பேசி கொண்டேயிருந்த அவர் வெளிப்படையாக தெரியும் வகையில் வெட்கமற்ற நிலையில் பல விஷயங்களை கூற ஆரம்பித்தார். மிகவும் அவமரியாதையுடன் நடந்து கொண்டார். நாகரிகத்தின் எல்லா நல்ல அம்சங்களையும் கைவிட்டுவிட்டு ஏக வசனங்களால் நீ, வா, போ என்று பேச ஆரம்பித்தார். இப்படிப்பட்ட நிலைமையிலும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அவரை பார்த்து மீர் ஸாஹிப் அவர்களே! நீங்கள் என்னுடன் வாருங்கள். என்னுடன் சிறிது காலம் தங்குங்கள். அல்லாஹ் உங்களுக்காக ஏதாவதொரு அடையாளத்தை வெளிப்படுத்தி காட்டுவான். மேலும் உங்களுக்கு அவனே வழிகாட்டுவான் என்றே மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந் தார்கள். ஆனால், மீர் ஸாஹிபின் நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

*மௌலவி ஸாஹிப் தொடர்ந்து என்னிடம் இவ்வாறு கூறினார்கள்:*

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் சகிப்புத்தன்மையையும், தன்னை கட்டுப்படுத்தி கொள்வதில் அவர்களுக்கு இருக்கும் தனித்தன்மையையும் பார்த்த பிறகு அதையும் அவரால் தாங்கி கொள்ள முடியவில்லை. நானோ என்னை தன்மான உணர்வற்ற ஒரு குற்றவாளியாக உணர்ந்தேன். எனக்கு முன்னால் இந்த மனிதர் இத்தகைய இழிவான தாக்குதலை தொடுத்த பிறகும் கூட நான் அமைதியுடன் அமர்ந்திருப்பதா? என்று நான் நினைக்க ஆரம்பித்தேன். பிறகு என்னால் ஒன்றும் செய்யாமல் இருக்க முடியவில்லை. என்னால் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலும் நான் மீர் அப்பாஸை நோக்கி பாய்ந்தேன். எனது குரலை சற்று உயர்த்தி அவரை அதட்டினேன். இதன் காரணமாக அவர் அங்கிருந்து ஓடி விட்டார்.

*மௌலவி ஸாஹிப் அவர்கள் தொடர்ந்து என்னிடம் இவ்வாறு கூறினார்கள்:*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தன்னை கட்டுப்படுத்தி கொள்வதிலும் சகிப்பு தன்மையுடன் நடந்து கொள்வதிலும் காட்டிய உயர்வான முன்மாதிரியை கண்டு எனக்கு ஒருபுறம் வெட்கம் ஏற்பட்டாலும் மறுபுறம் நான் ஒரு தன்மான உணர்வற்ற குற்றவாளியாக ஆகுவதிலிருந்தும் என்னை காப்பாற்றிக் கொண்டேனே என்ற மகிழ்ச்சியும் எனக்கு ஏற்பட்டது. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களது முன்னிலையில் இவ்வாறு நான் நடந்து கொண்டதை எண்ணி எனக்கு வருத்தம் ஏற்பட்டது.

*ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் ஸியால்கோட்டி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியிருக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் சபையில் எவரையும் தீய பெயர்களால் நினைவு கூர்ந்ததில்லை. இது அவர்களது உள்ளத்தில் கொழுந்து விட்டு எரியும் எந்த நெருப்பும் இல்லை என்பதற்கு தெளிவான ஆதாரமாக இருக்கின்றது. அவ்வாறு இல்லையென்றால் எந்த அளவுக்கு சமுதாயம் அவர்களுக்கு தொல்லை கொடுத்ததோ, மேலும் மவ்லவிமார்கள் அவர்களிடம் எவ்வாறு பரிமாறினார்களோ அதையெல்லாம் பார்க்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அதையெல்லாம் ஒரு உலகவாதியைப் போன்று உணர்வதாயிருந்தால் இரவும் பகலும் அதையே எண்ணி அவர்கள் கவலையடைந்து அவர்களது புலன்களும் அது செய்ய வேண்டிய வேலையை செய்யாத நிலை ஏற்பட்டிருக்கும். அவர்களது எல்லா பணிகளும் சீர்குலைந்து போயிருக்கும்.

*தொடர்ந்து மவ்லவி சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:*

ஒரு நாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள். நான் எனது நஃப்ஸை எந்த அளவு எனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளேன் என்றால் இறைவன் எனது

நஃப்ஸை எப்படிப்பட்ட முஸ்லிமாக ஆக்கியுள்ளான் என்றால் ஒருவர் ஒரு வருடம் முழுவதும் எனக்கு எதிரில் அமர்ந்தவாறு மிகவும் அசுத்தமான சொற்களால் என்னை ஏசிப் பேசினாலும் கூட இறுதியில் அவர்தான் வெட்கப்பட வேண்டியது வரும். மேலும் எனது கால்களை அது இருக்கின்ற இடத்திலிருந்து அவரால் அகற்ற முடியவில்லை என்பதை அவர் ஒப்புக்கொள்ள வேண்டியது வரும்.

*மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் இன்னொரு சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்:*

தான் மிகப்பெரும் அனுபவசாலி என்றும் காலத்தின் தட்ப வெட்ப நிலைகளை அறிந்து செயல்படக்கூடியவர் என்றும் தன்னைப் பற்றி பெருமிதமாக கூறித்திரிந்த ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் தொடர்பாக அவர்களிடம் அந்த நபர் மிகவும் அவமரியாதையாக பேசினார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை பார்த்து நீங்கள் உங்கள் வாதத்தில் பொய்யராவீர்கள் என்று கூறினார். மேலும் இவ்வாறு சூழ்ச்சி செய்யக்கூடிய பலரையும் நான் பார்த்துள்ளேன். அவர்களை எனது கைப்பிடியில் நான் வைத்துள்ளேன் என்றெல்லாம் அவமரியாதையாக அவர் பேசினார். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களது நெற்றியில் ஒரு சிறிய மாற்றத்தை கூட பார்க்க முடியவில்லை. அவர்கள் மிகுந்த அமைதியுடன் அவர் கூறுவதை கேட்டுவிட்டு தனக்கு பேச வாய்ப்பு கிடைத்த போது மிகவும் மென்மையாக அவருக்கு புரிய வைக்க முயற்சி செய்தார்கள். இவ்வாறே ஒருவர் அவர்களுக்கெதிராக அவதூறாக அவர்களுடன் முற்றிலும் தொடர்பில்லாத விஷயங்களை எழுதினாலும் அல்லது பேசினாலும் அவற்றை கேட்ட பிறகு அந்த சமயத்திலும் சரி அல்லது அவர்கள் தனிமையாக இருந்த போதிலும் சரி அவ்வாறு எழுதிய அல்லது பேசிய நபரை பற்றி தனது வெறுப்பை வெளிப்படுத்தும் வகையிலோ அல்லது அவர் மீது குற்றம் சுமத்தும் வகையிலோ அவர்கள் எதையும் கூறியதில்லை. சில நேரங்களில் மற்றவர்கள் உள்ளத்தை புண்படுத்தக்கூடிய இப்படி இழிவாக பேசுபவர்களின் வீணான விஷயங்களை கேட்காமல் இருப்பதற்காக அந்த இடத்திலிருந்து எழுந்து சென்றுள்ளார்கள். பிறகு அவர்களில் ஒருவர் மற்றவரிடம் இதை பற்றி இரகசியமாக பேசி கொண்டு இருந்தனர். சபை கலைந்த பிறகு அதில் வந்திருந்த ஒவ்வொருவரும் தங்களது தைரியத்தையும் வெளிப்படுத்தி காட்டினார்கள். நாம் கேட்ட இவை எவ்வளவு மோசமான வார்த்தைகள்? என்றெல்லாம் அது பற்றி விமர்சனமும் செய்தார்கள். ஆனால், அல்லாஹ்வின் நற்பண்புகளின் தோற்றமாக திகழ்ந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோ இதைப் பற்றி எதுவுமே பேசவில்லை.

*1904 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி ஸாஹிப் இர்பானி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:*

ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அன்னாரை ஏசிப் பேசியவாறு செய்தி வெளியிட்டுள்ள ஒரு பத்திரிகையைப் பற்றி கூறினார். இதை கேட்ட அவர்கள் இவர்கள் பொறுமையை கைக்கொள்ள வேண்டும். அதற்கு மாறாக இவ்வாறு ஏசுவதால் என்ன பலன் கிடைக்க போகின்றது? என்று கூறினார்கள்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் மக்கள் அவர்களை இழிவாகப் பேசினார்கள். மேலும் அன்னாரை முஸம்மம் (இழிவிற்குரியவர்) என்று அவர்கள் கூறினார்கள். இதை கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களது இழிவான சொற்களை கேட்டு நான் என்ன செய்ய முடியும்? அல்லாஹ்வோ எனது பெயர் முஹம்மத் (புகழுக்குரியவர்) என்றே வைத்துள்ளான் என்று கூறினார்கள். அவ்வாறே இந்த காலத்தில் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான். மேலும் என்னை பற்றி இறைவன் யஹ்மிதகல்லாஹு மினல் அர்ஸி அதாவது அல்லாஹ் அரியணையிலிருந்து உம்மைப் புகழ்கின்றான் என்று கூறியுள்ளான். இந்த வஹீ பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டிருக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஏச்சுப் பேச்சுக்களை கேட்டு விட்டு இந்த மக்களுக்காக நான் துஆ செய்கின்றேன். எம்மிடமுள்ள கருணையின் உணர்வுகள் காரணமாக கோபத்தை நாம் அழித்து விட்டோம்.

1903 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற ஒரு சம்பவத்தை பற்றி *ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்பானி (ரலி) அவர்கள்* இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஒரு டாக்டர் லக்னோவிலிருந்து வந்திருந்தார். அவரது கூற்றிற்கேற்ப அவர் பாக்தாதில் வாழ்ந்தவர்களின் சந்ததிகளில் வந்தவராவார். மேலும் மிக நீண்ட காலமாக அவர் லக்னோவில் தங்கியிருந்தார். தன்னை சிலர் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக அனுப்பி வைத்திருப்பதாக அவர் கூறினார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் வந்து சில கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார். அவரது பேச்சில் பரிகாசமும், தற்பெருமையும், கேலி கிண்டலும் இருந்தன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த விஷயத்தை பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. அவர் கேட்ட கேள்விகளுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பதிலளித்தார்கள். பேசிக்கொண்டிருந்தபோதே அந்த டாக்டர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் அரபியில் என்னைப் போல் எவரும் தெளிவான நடையில் என்னுடன் போட்டி போட முடியாது என்பது உங்களது வாதமாகும். மேலும் மிகவும் சிறந்த முறையில் அரபியில் என்னால் எழுத முடியும் என்பதும் உங்களது வாதமாகும். இது சரிதானா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆம்! இதுவே எனது வாதமாகும் என்று பதிலளித்தார்கள். இதைக் கேட்ட அவர் மிகவும் எள்ளி நகையாடியவாறு ஆணவத்துடன், அவமரியாதையாக நான் கூறினால் மன்னிக்க வேண்டும்; உங்களது நாவால் காஃப் என்ற எழுத்தைக்கூட உங்களால் சரியாக உச்சரிக்க முடியவில்லை என்று கூறினார்.

*ஹஸ்ரத் யாகூப் அலி இர்பானி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:*

நான் அந்த சபையில் அமர்ந்திருந்தேன். அந்த டாக்டர் கூறிய சொற்கள் எனக்கு மிகவும் துன்பத்தைத் தந்தது. அந்த சொற்கள் எந்த அளவு எங்களை புன்படுத்தும் சொற்களாக இருந்தன என்றால் எங்களால் அதை தாங்கி கொள்ள முடியவில்லை. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் சகிப்புத்தன்மை இருந்ததால் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். அந்த சமயத்தில் அந்த சபையில் ஸாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் ஸாஹிப் ஷஹீது அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்களால் அவர்களது உணர்வுகளை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்கள் அந்த டாக்டரை அதட்டினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களால்தான் நீங்கள் கூறுவதை சகித்துகொள்ள முடிந்துள்ளது என்று ஹஸ்ரத் அப்துல் லத்தீப் சாஹிப் (ரலி) அவர்கள் கூற அதற்கு அந்த டாக்டர் மறுமொழி கூற இவ்வாறு இருவருக்குமிடையில் தர்க்கம் வலுவடைந்து இருவரும் ஒருவருடன் மற்றொருவர் மோதி சண்டையிடும் நிலை உருவாகிவிடும் போல் தெரிந்தது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா ஸாஹிப் அவர்களை அவ்வாறு செய்யக்கூடாது என்று தடுத்தார்கள். இதைப் பார்த்த அந்த டாக்டர் பரிகாசமான சொற்களையும் ஏச்சுப் பேச்சுக்களையும் கேட்பது நபிமார்களின் பங்கில் உள்ளதாகும் என்று கூறினார். இதைக் கேட்டதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நாம் ஒருபோதும் உங்களிடம் வெறுப்படையவில்லை. இங்கு நாம் பணிவையையும் தாழ்மைக் குணத்தையும் கடைபிடித்துள்ளோம் என்று கூறினார்கள். காஃப் என்ற சொல்லை சரியாக உங்களால் உச்சரிக்க முடியவில்லை என்று அவர் கூறிய போது அதற்கு பதிலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், நான் லக்னோவில் வசிப்பவன் அல்ல. எனவே எனது உச்சரிப்பும் லக்னோவில் இருப்பவர்களை போன்றே இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறக் கூடாது. நான் பஞ்சாபைச் சார்ந்தவன். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தொடர்பாகவும் அவரால் தனது கருத்தை சரியாக வெளிப்படுத்தும் ஆற்றல் இல்லாதவர் என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. நபிமொழிகளில்

மஹ்தி பற்றியும் அவரது நாவில் திக்குவாய் இருக்கும் என்று வந்திருக்கின்றது என்று கூறினார்கள். பிறகு அங்கு கூடியிருந்தவர்களை பார்த்து **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இவ்வாறு கூறினார்கள்:

எனது கொள்கைப்படி ஏதாவதொரு விருந்தாளி நம்மிடம் வந்திருக்கும்போது அவர் நம்மை ஏசிப் பேசும் அளவில் கடின நிலைமை ஏற்பட்டாலும் அதை நாம் பொறுத்து கொள்ள வேண்டும். ஏனென்றால், நமது சீடர்களிடம் நாம் எதிர்பார்க்கும் அதே மரியாதையையும் அன்பையும் நாம் இவர்களிடமும் எதிர்பார்க்க நமக்கு என்ன உரிமை இருக்கின்றது? அவர்கள் மென்மையாக பேசுவதை அவர்கள் நம் மீது செய்துள்ள அருளாகவே நாம் கருதுகின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மை சந்திக்க வருபவர்களுக்கு நம்மீது சில உரிமைகள் உள்ளன என்று கூறியுள்ளார்கள். எனவே, விருந்தாளிகளுக்கு நம்மால் ஏதாவது துக்கம் ஏற்பட்டால் அது பாவமாகிவிடும் என்றே நான் கருதுகின்றேன்.

இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிவிட்டு அந்த டாக்டரை பார்த்து இங்கு நடந்தவை தொடர்பாக நீங்கள் எதையும் மனதில் வைத்து கொள்ளக் கூடாது. நீங்கள் சிறிது காலம் இங்கு தங்கியிருக்க வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். ஏனென்றால், நாம் இருவரும் ஒரே கலிமாவை தான் கூறுகின்றோம் என்று கூறினார்கள். பிறகு தன்னை ஏற்றுக்கொண்டவர்களை பார்த்து இவர் உண்மையை புரிந்து கொள்ளாத வரை இவருக்கு எதையும் கூற உரிமை உண்டு என்றும் கூறினார்கள்.

இந்த டாக்டர் சாஹிப் சில நாட்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் சில நாட்கள் தங்கியிருந்தார். காலையிலும், மாலையிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அவர் கேள்விகளை கேட்டு கொண்டிருந்தார். அவருடன் நடந்த கேள்வி பதில்கள் அந்த சமயத்தில் ஜமாஅத் பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டன. ஒரு நாள் அந்த டாக்டர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் எனக்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார். அதைக் கேட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நான் இந்துக்களுக்காகவும் கூட துஆ செய்கின்றேன். ஆனால், இறைவனை சோதித்துப் பார்ப்பது அவனது பார்வையில் வெறுக்கத்தக்க செயலாகும். நான் உங்களுக்காக துஆ செய்வேன். நீங்களும் எனக்கு அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டிருங்கள். ஏதாவது எனக்கு வெளிப்படுத்தி காட்டப்பட்டால் அதை பற்றியும் உங்களுக்கு தெரிவிப்பேன். ஆனால், இது எனது வேலையல்ல. மாறாக அல்லாஹ் விரும்பினால் சிலவற்றை வெளிப்படுத்தி காட்டுவான். எவரது நாட்டத்திற்கும் ஏற்பவும் செயல்படவேண்டும் என்ற நிலை அவனுக்கில்லை. மாறாக, *காலிபுன் அலா அம்ரிஹி* அவன் தனது செயல்களில் மிகைத்து நிற்பவனாவான். எனவே ஈமானை ஏதாவதொரு விஷயத்துடன் தொடர்புபடுத்தி கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. ஈமான் கொள்வதில் நிபந்தனைகளை வைத்தால் அது பலவீனமான ஈமானாகும். நன்மைகளில் முன்னேறுவது எவரது சக்திக்கும் உட்பட்ட ஒன்றல்ல. அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகும். அதற்கு நிபந்தனைகள் தேவைப்படும். இதற்காக நீங்கள் மற்றவர்களை எள்ளி நகையாடி பரிகாசம் செய்யும் சபைகளிலிருந்து விலகியிருக்க வேண்டியது அவசியமாகும். இது அழ வேண்டிய நேரமாகும். சிரிக்க வேண்டிய நேரமல்ல. நீங்கள் இங்கிருந்து சென்ற பிறகு இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை உண்மையான இறையச்சத்துடன் துஆ செய்யுங்கள். மனிதனுக்கு மரணம் எப்போது வரும் என்பது தெரியாது. நீங்கள் அல்லாஹ்விடம் என் இறைவா! எனக்கு எதுவும் தெரியாது. நீதான் உண்மையை அறிந்தவனாவாய். இந்த நபர் உண்மையாளராக இருந்தால் இவரை மறுத்து அதன் காரணமாக நான் அழிந்து விடாமல் என்னை பாதுகாப்பாயாக. இவர் பொய்யராக இருந்தால் இந்த சோதனையிலிருந்து என்னை காப்பாற்றுவாயாக! என்று துஆ செய்யுங்கள். அல்லாஹ் விரும்பினால் உண்மையான விஷயத்தை உங்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவான் என்று கூறினார்கள். இதை கேட்ட அந்த டாக்டர் சாஹிப் உண்மையில் நான் மிக தீய எண்ணத்துடன் இங்கு வந்தேன். உங்களைப் பரிகாசம் செய்ய வேண்டும். உங்களுடன் அவமரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்றே நான் எண்ணியிருந்தேன். ஆனால், இறைவன் எனது இந்த எண்ணத்தை அகற்றி

விட்டான். உங்களுக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ள ஃபத்வாக்கள் (மார்க்க தீர்ப்புகள்) முற்றிலும் தவறானவை என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நீங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அல்ல என்று உறுதியாக என்னால் மறுக்க முடியாது. மாறாக, நீங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றீர்கள் என்ற இந்த அம்சம் மிகவும் வலுவானதாக எனக்கு தென்படுகின்றது. நீங்கள்தான் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவீர்கள் என்பதை ஓரளவு என்னால் இப்போது ஏற்று கூற முடியும். எனது அறிவிற்கும் புரியும் திறனுக்கும் ஏற்ப நான் உங்களிடமிருந்து அருள்களை பெற்றுள்ளேன். நான் புரிந்தவற்றை என்னை தேர்ந்தெடுத்து இங்கு அனுப்பியுள்ள மக்களுக்கு நான் வெளிப்படுத்தி காட்டுவேன். நேற்று வரை எனது கருத்து வேறானதாக இருந்தது. இன்று எனது கருத்து வேறானதாக மாறிவிட்டது. ஒரு பயில்வான் சண்டை போடாமல் தனது தோல்வியை ஒப்புக்கொள்ளமாட்டார். அப்படி இருந்தால் அவர் ஆண்மகனே அல்ல. எனவே, ஆட்சேபனைகளை செய்யாமல் நீங்கள் கூறும் விஷயங்களை ஏற்றுக் கொள்வதை நான் பொருத்தமான செயலாக கருதவில்லை என்று அவர் கூறினார்.

அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும் உண்மையை உண்மை என்று ஏற்றுக்கொண்டு தனது எண்ணத்தை மாற்றி கொள்ளும் அளவில் அவரிடம் நேர்மை இருந்தது.

*ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஒரு முறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பள்ளிவாசலில் சொற்பொழிவு நிகழ்த்தி கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு சீக்கியர் பள்ளிவாசலுக்குள் நுழைந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னிலையில் அவர்களுக்கு எதிராகவும் அவர்களது ஜமாஅத்திற்கு எதிராகவும் மிகவும் அசிங்கமான சொற்களால் ஏச ஆரம்பித்தார். அவர் ஏச ஆரம்பித்ததிலிருந்து அவர் அமைதியாக ஒரு நொடி கூட இருக்கவில்லை. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர் கூறுகின்ற எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த மக்களது இயல்பில் எந்த அளவு வேகம் இருந்ததென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அனுமதி வழங்கியிருந்தால் அந்த இடத்திலேயே மக்கள் அவரது எலும்புகளை உடைத்து எறிந்திருப்பார்கள். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அஞ்சியவாறு அனைவரும் அமைதியாக இருந்தார்கள். இறுதியில் அசிங்கமாக பேசுவதில் அவர் எல்லையை மீறி சென்ற சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரண்டு நபர்களிடம் அவரை மெதுவாக பிடித்து பள்ளிவாசலுக்கு வெளியில் கொண்டு விட்டு விடுங்கள். ஆனால் அவரை எதுவும் நீங்கள் கூறக்கூடாது. அப்படியும் அவர் வெளியேறவில்லையென்றால் இங்கொரு சிப்பாய் இருக்கின்றார். அவரிடம் அவரை ஒப்படைத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் ஹலீம் என்ற பண்பின் சிறப்புமிகு உயர்வான தோற்றமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்தார்கள். பிறகு இந்த காலத்தில் தனது எஜமானரை பின்பற்றியவாறு இந்த பண்புகளின் உயர்வான அளவுகோலை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். அவர்களது வாழ்வில் நிகழ்ந்த சில சம்பவங்களை நான் கூறினேன். இந்த உயர்வான முன்மாதிரிகள் நமது சீர்த்திருத்தத்திற்கு மிகவும் அவசியமானவையாகும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அவனது நிறத்தை மேற்கொண்டவாறு அவனது பண்புகளை நமது வாழ்வில் கடைபிடிப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

**JUMUA KUTHBA**
***HADHRAT KHALIFATUL MASIH V***
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 21.03.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**